## தொடக்க மற்றும் இடைநிலைப் பள்ளிகள் உள்ளடங்கலாக கல்வி

(இனம் - 17)

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 45–ஆவது பிரிவுக்கூறின்படி இச்சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து, அதாவது, 1960–ஆம் ஆண்டிலிருந்து பத்து ஆண்டுகளுக்குள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டுமென அரசு நிர்ணயித்துள்ளது. குறிப்பாக, 5 வயது முடிந்ததும் பள்ளியில் சேர்ந்து தொடர்ந்து எட்டு ஆண்டுகளுக்கு, அதாவது, எட்டாம் வகுப்புவரை கல்வி அளிக்க இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், நாடு விடுதலை பெற்று 50 ஆண்டுகள் நிறைவு பெற உள்ள நிலையிலும் இந்த நோக்கம் நிறைவு பெறா நிலையே நிலவுகிறது. அனைத்திந்திய அளவில் இம்முக்கியத்துவத்தின் குறைபாடு நன்கு அறியப்படுகிறது. தமிழ் நாட்டில், தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் என்பதைப் பொறுத்தவரையில் இந்த இடைவெளியானது பொதுவில் பெருமளவு தரத்திலும், குறிப்பாகப் பெண்களைப் பொறுத்தவரையில் அளவிலும், தரத்திலும், அமைந்துள்ளது. (6–11 வயதுப் பெண்கள் பிரிவுக்கு 5% மற்றும் 11–14 வயது பிரிவுக்கு 11%). வட்டாரத்தில், சில குடியிருப்பிடங்கள் தொடக்கக் கல்விக்கு வாய்ப்பில்லாமல் அல்லது குறைந்த வாய்ப்புடன் உள்ளன. இந்த இடைவெளியானது, பெரும் எண்ணிக்கையில் பள்ளிகள் கட்டப்பட்டு, கடந்த பத்தாண்டுகளில் 5704 கோடி ரூபாய்க்கு மேல் செலவிடப்பட்ட நிலையிலும் நீடிக்கிறது. தொடக்கக் கல்வி அளிப்பதிலும், பிற குறைந்த அளவு அடிப்படை வசதிகள் செய்து தருவதிலும், மாநில அரசுக்குரிய கடமையும், பொறுப்பும் பற்றி அண்மையில் 1996–ஆம் ஆண்டில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தொடக்கக் கல்வியை அனைவருக்கும் கிடைக்கச் செய்தல் என்பது திட்டத்தின் முதன்மை நோக்கமாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இதனை, இயன்ற அளவு குறுகிய காலத்தில், அதாவது, ஒன்பதாவது திட்டக் காலத்திற்குள் நிறைவு செய்யப்படவும் வேண்டும்.

02. தொடக்கக் கல்வியில் தமிழ்நாட்டில் இதுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றம் பற்றி சுருக்கமாகத் தொகுத்துரைக்கலாம். இப்போது, இம்மாநிலத்தில் 30471 தொடக்கப் பள்ளிகளும் 5549 ஆதாரப் பள்ளிகளும் உள்ளன. ஒவ்வொரு கிலோ மீட்டர் தொலைவுக்குள்ளும் 500 பேருக்கு மேல் மக்கள் தொகையைக் கொண்டுள்ள ஒவ்வொரு குடியிருப்பிலும், பள்ளிக்குச் செல்லும் வயதிலுள்ள குழந்தைகளுக்கு எளிதான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதற்கென தொடக்கப் பள்ளிகளைத் தொடங்கலாம். இவ்வாறாக, 99.6% குடியிருப்பிடங்களில் முன்னரே தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இன்னும் 204 குடியிருப்பிடங்களுக்கு மட்டுமே தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட வேண்டியுள்ளன. பள்ளியில் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை, 6–11 வயதுக்குட்பட்டவர்களில் 100.31% மற்றும் 11–14 வயதுக்குட் பட்டவர்களில் 99.12% ஆகும். (பள்ளியில் சேர்ந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை அந்தந்த வயதுத் தொகுதிகளில் உள்ளவர்களில் பள்ளிக்குச் செல்லும் மொத்த குழந்தைகளின் எண்ணிக்கையை, உள்ளபடியாகப் பள்ளியில் சேர்க்கப் பட்டவர்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் அடிப்படையில் கணக்கிடப் பட்டுள்ளது) தொடக்கப்பள்ளி மற்றும் நடுத்தரப் பள்ளியில் படிக்கும் குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையானது 88.94 லட்சங்களாகும்.

03. தொடக்கக் கல்விக்கு, 1996–97இல் ஒதுக்கப்பட்ட நிதியானது. 1232.22 கோடி ரூபாய்களாகும். இது, கல்விக்கென மாநில அரசுக்கு ஏற்படும் செலவில் கணிசமான அளவாகும். பள்ளியில் சேர்க்கப்பட்டவர்களின் கணக்குபடி அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளிக்கப்பட்ட நிலையினை இம்மாநிலம் அடைந்து விட்டதாகக் கூறப்பட்டாலும், பள்ளியில் சேர்க்கப்படாமல் விடுபட்டவர்கள், பள்ளியில் குறைந்த எண்ணிக்கையில் பெண்கள் அனுமதி, ஆசிரியர்கள் பற்றாக் குறை முதலியவை தொடக்கக் கல்வியின் தரத்தையும், பயனுடைமையையும் குறைத்துவிட்டன. எனவே, இனிவரும் ஆண்டுகளில், தொடக்கக் கல்வியின் செயலெல்லையானது, (1) 14 வயது வரையுள்ள குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்த்துத் தொடர்ந்து படிக்க வைத்தல் (2) குறைந்தபட்ச அளவு கல்வியளிக்க கல்வித் தரத்தைப் போதிய அளவில் மேம்படுத்துதல் (3) பள்ளியில் சேர்த்து தொடர்ந்து படிக்கவைக்கப்படும் பெண்களின் எண்ணிக்கையை உயர்த்துவதில் முன்னேற்றம் காணல் என்பனவாக வலியுறுத்தப்பெற வேண்டும்.

04. இந்நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ்நாட்டில் இக்கல்வி நிலையங்கள் தொடங்கப்பட்டபோது, தொடக்கக் கல்வி அளிப்பதென்பதானது, பெரும்பாலும் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகவே இருந்தது. உள்ளாட்சிக் கழகங்களும், மாவட்டக் கழகங்களும் நிறுவப்பட்டு, தொடக்கப் பள்ளிகளையும், நடுத்தரப் பள்ளிகளையும், உயர் நிலைப் பள்ளிகளையும் பராமரித்து வந்தன. 1958–ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மாவட்டக் கழகங்கள் நீக்கப்பட்ட பின்னர் ஊர் மற்றும் வட்டார நிலையில் பஞ்சாயத்து ஆட்சி கல்வி நிலையங்கள் நிறுவப்பட்டன. இடைநிலைக் கல்வி, அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டது. தொடக்கக் கல்வி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு (வட்டாரங்கள்) மாற்றப்பட்டது. 1958–க்கும் 1981க்கும் இடையில், புதிய தொடக்கப்பள்ளி தொடங்குதல், ஆசிரியர் நியமனம் மற்றும் மாற்றம், பள்ளிகளின் மேற்பார்வை முதலியவை, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பஞ்சாயத்து ஆட்சி நிறுவனங்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் பொறுப்பாகவே இருந்தது. மாநிலத்தில், தொடக்கக் கல்வியை மேம்படுத்துவதில் ஊராட்சி ஒன்றியத் தலைவரும் ஊராட்சிகளின் தலைவர்களும் முக்கிய பங்கு வகித்தனர்.

05. 1981–க்கும், 1994–க்கும் இடையில், தொடக்கக் கல்வியானது முப்பெரும் அமைப்பு மாற்றங்களையடைந்தது. அதாவது (அ) மாநில அளவில் தனி இயக்ககம் உருவாக்கம் (ஆ) மாவட்ட அளவில் மேற்பார்வைப்பணி மாற்றம் (இ) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்களாக மாற்றம். 1981–இல் அரசு பெரும் கொள்கை முடிவை எடுத்தது. அதன்படி, ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அனைவரும் அரசுப் பணியாளர்களாயினர். (அ.ஆ.நிலை எண்.857 கல்வித்துறை நாள் : 23.5.81) எனினும், தொடக்கப்பள்ளிக் கட்டடங்களின் கட்டுமான மற்றும் பராமரிப்புப் பொறுப்பானது ஊராட்சி ஒன்றியத்திடமே தங்கிவிட்டது. ஊராட்சி ஒன்றிய நிலையில், உதவித்தொடக்கக் கல்வி அலுவலர் ஒருவர் அமர்த்தப்பட்டு, அவரிடம் அவருடைய அதிகார எல்லைக்குட்பட்ட தொடக்கக் கல்விப் பள்ளிகளைப் பராமரிக்கும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டது. மேற்பார்வை, ஆய்வு மற்றும் கண்காணிப்புக்கென 1994–ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், மாவட்ட நிலையில் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். தொடக்கக் கல்விக்கென, கொள்கைகள் மற்றும் வளர்ச்சித் திட்ட முறைப்படுத்தல் மற்றும் செயற்படுத்தலுக்காக 1986இல் தொடக்கக் கல்வி இயக்ககம் ஒன்று உருவாக்கப்பட்டது.

06. உலக வங்கி நிதிபெற்ற மாவட்டத் தொடக்கக் கல்வி திட்டத்தின் மதிப்பீட்டுக் குழுவால் அண்மையில், இம்முறைமையில் (1994ஆம் ஆண்டு மேத்திங்கள்) எடுத்துகாட்டப்பட்டுள்ள தொடர்ந்திருக்கக் கூடிய சில வலுவற்ற இனங்கள் குறித்துக் கவனம் எடுத்துக் கொள்ள வேண்டுவது இன்றியமையாததாகும். உட்பிரிவின் திறன் மற்றும் பயனுடைமையில் உள்ள முதன்மைத் தடைகள் வருமாறு: (அ) பள்ளியில் ஒருபோதும் சேராமல் உள்ள குழந்தைகளின் பெரும் எண்ணிக்கையும், தொடர்ந்து இருந்து வருகின்ற எழுத்தறிவின்மையின் உச்ச நிலையும் சுட்டிக்காட்டுகின்ற வாய்ப்புக்குறைவு. (ஆ) உயர் மற்றும் விடுபாடு வீதங்களால் எதிரொலிக்கப்படும் உள்ளாற்றல் திறன் குறைபாடு. (இ) கற்றல் சாதனைக் குறைவளவால் அறியப்பட்ட ஏற்கவியலாத தரக்குறைவு (ஈ) பால்பாகுபாடு, சாதி மற்றும் பண்படாதவர்களின் சேர்க்கை காரணமாகக் கல்வி பயிலுவதில் உள்ள பாதகங்களின் குறிப்பிடத்தக்க நிதி மாறுபாடுகளால் தெளிவாக விளங்குகின்ற சமத்துவமின்மை. (உ) தேசிய, மாநில மற்றும் மாவட்டயளவில் குறிப்பிடத்தக்க பற்றாக்குறை நிதி மற்றும் வலுவற்ற மேலாண்மையால் காட்சியளிக்கும் உட்பிரிவு வற்புறுத்தல்கள்.

07. எழுபத்து மூன்றாவது அரசமைப்புச் சட்டத்திருத்தமானது, தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி (இனம் – 17) யை உள்ளடக்கிய 29 இனங்கள் தொடர்பில் பஞ்சாயத் ராஜ் கல்வி நிறுவனத்திற்கு அதிகாரங்களையும், பொறுப்புகளையும் அளிக்கவேண்டுமென வலியுறுத்துகிறது. 1994–ஆம் ஆண்டைய தமிழ்நாடு ஊராட்சிச் சட்டம், தனியார் பராமரிக்கும் ஆதாரப் பள்ளிகளுக்கு மானியம் அளிப்பது உள்பட, ஆதாரப் பள்ளிகளின் தொடக்கம், பராமரிப்பு மற்றும் விரிவாக்கம், மேம்பாடு ஆகியவற்றிற்குரிய பொறுப்பினை ஊராட்சி ஒன்றியத்திற்கு அளித்துள்ளது. (பிரிவு 112, இனம் 2) ஆனால், இச்சட்டமானது, தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட பள்ளி ஆசிரியர்களை அரசுப்பணியாளர்களாகக் கருதுகிறது (பிரிவு 109). 1981–க்கும், 1994க்கும் இடையில் மாநிலத்தில் தொடக்கக் கல்வி மேலாண்மையில் மாற்றங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதன் அடிப்படையிலும், மேலே குறிப்பிடப்பட்ட அரசியலமைப்பு மற்றும் சட்டப்படியான வழிவகைகளின் படியும் பஞ்சாயத் ராஜ் நிறுவனத்திடம் அதிகாரங்களை ஒப்படைக்க மாநிலத் திட்ட ஆணையம் கருதியது. தொடக்கப் பள்ளிகளை நிருவகிப்பதில் சமுதாயத்தின் பங்கு இன்றியமையாதது. தங்களுடைய குழந்தைகள் கல்வி பெறுவதற்கு, இப்பள்ளிகளை மேலாண்மை செய்ய ஊராட்சியே மிகச்சிறந்த உள்ளூர் மற்றும் பொதுவுடைமை நிறுவனமாகும். இப்போதுகூட, தொடக்கப்பள்ளி மற்றும் ஆதாரப்பள்ளிக் கட்டடங்களின் கட்டுமானத்திற்கும் பராமரிப்புக்கும் ஊராட்சி ஒன்றியங்களே பொறுப்பாகும்.

08. தொடக்க மற்றும் ஆதாரப்பள்ளி ஆசிரியர்களின் எண்ணிக்கையானது ஏறக்குறைய 1.75 லட்சம் ஆகும். அவர்கள் அரசுப்பணியாளர்களாகவே தொடர உள்ளனர். அரசுப் பணியாளர்களாக உள்ள இப்போதைய ஆசிரியர்களால் துய்க்கப்பட்டு வரும் சம்பளம் மற்றும் சலுகைகள் பாதுகாக்கப்பட வேண்டும். அதே வேளையில், அவர்கள் வட்டாரம் மற்றும் ஊர்நிலையில் மக்களாட்சித் தத்துவப்படி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பஞ்சாயத் ராஜ் நிலையத்திற்குப் பதில் சொல்லக் பொருப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள் ஊராட்சி ஒன்றிய அவை நடத்தும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளல் வேண்டும். மாவட்ட நிலையில், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், தொடக்கக் கல்வி தொடர்பான அனைத்துப் பொருள்களிலும் மாவட்ட ஊராட்சிகளுக்கு/கருத்துரை பதிலுரை வழங்க வேண்டும். தொடக்கக் கல்வி இயக்குநர் கல்வி தொடர்பான பொருள்களிலும் பஞ்சாயத் ராஜ் நிறுவனங்கள் வாயிலாகத் தொடக்கக் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும் ஊராட்சிகளுக்குத் தொடர்ந்து வழிகாட்டுவார்.

09. மேற்படி பின்னணியில், தொடக்க மற்றும் ஆதாரக் கல்வி தொடர்பில் ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும், மாவட்ட ஊராட்சிகளுக்கும் பின்வரும் அதிகாரங்களை ஒப்படைக்க மாநிலத்திட்ட ஆணையம் பரிந்துரைத்துள்ளது. உயர்நிலை / மேல்நிலைக் கல்வியானது, பள்ளிமுறையில் பயிற்சியளிக்கப்படுவதால் (பல மாநிலங்களில் கல்லூரிகள் மேல்நிலைக் கல்வியைப் பயிற்றுவிக்கின்றன). அரசின் இப்போதைய இடைநிலைக் கல்வி ஏற்பாடும், மேலாண்மையும் தொடரலாமென மாநிலத் திட்ட ஆணையம் பரிந்துரைக்கிறது.

## I ஊராட்சி

| நடவடிக்கை<br>(1) | | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|---|
| 1. புதிய பள்ளிகளைத் தொடங்குதலும் கல்வி வசதிகளை அளித்தலும். | (அ) | பள்ளி வயது சிறுவர்களை மதிப்பிடுவதற்குச் ஊராட்சி ஆய்வு மேற்கொள்ளல். |
| | (ஆ) | பள்ளி வயது சிறுவர்களை முழு அளவில் சேர்ப்பதற்கான இயக்கம் நடத்துதல். |
| | (இ) | தொடக்கப் பள்ளியைத் துவங்கவும், ஊராட்சியிலுள்ள பள்ளியைத் ஆதாரநிலைப் பள்ளி அல்லது இடை நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிந்துரைத்தல். |
| | (ஈ) | சிறப்புப் பள்ளிகள்/உள்ளுறை பள்ளிகள் மற்றும் விடுதிகளைத் திறப்ப தற்கு ஊராட்சி ஒன்றியத்திற்குப் பரிந்துரைத்தல். |
| | (உ) | பள்ளி வரைபடம் தயாரிக்கவும் பள்ளிகளின் அமைவிடத்தை மாற்றி அமைப்பதற்கான இடத்தைக் காட்டு வதிலும் ஊராட்சி ஒன்றியத்துக்கு உதவுதல். |
| | (ஊ) | ஆசிரியர் சமுதாயத் தொடர்புகளில் நலமார்ந்த இணக்கமான உறவுகளை ஏற்படுத்த உறுதி செய்தல். |
| | (எ) | படிப்பை இடையில் நிறுத்துவோரின் எண்ணிக்கையை குறைக்க பெற்றோர் களுக்கு தக்க அறிவுரை வழங்கி குழந்தைகளை தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பச் செய்தல். |

| (1) | | (2) |
|---|---|---|
| | (ஏ) | ஆதாரப் பள்ளிகளிலும், தொடக்கப் பள்ளிகளிலும் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் வருகையை மேற் பார்வையிட்டு ஆசிரியர்களின் முறை யான வருகையை உறுதி செய்ய ஊராட்சி ஒன்றியம்/உதவிக் கல்வி அலுவலருடன் இணைந்து தொடர் நடவடிக்கை எடுத்தல். |
| 2. மாநில / மைய அரசின் ஆதரவு பெற்ற மாணவர் நலத்திட்டங்களைச் செயற்படுத்துதல். | (அ) | கற்பதற்கு உதவும் பொருள்கள், புத்தகங்கள், சீருடை, காலணி, மற்றும்பிற பொருள்களையும் மாணவர்களுக்கு வழங்க உதவுதல். |
| | (ஆ) | கரும்பலகை இயக்கம், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டங்கள் போன்ற கல்வி திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சி முறைகளை செயற்படுத்த உதவுதல். |
| 3. கல்வி கட்டுமான உள்ளமைப்புகளை பராமரித்தல் | (அ) | பள்ளிக் கட்டடங்கள், குடிநீர்வசதி,விளையாட்டுத் திடல்கள் (அறைகலன்),கழிவறைகள் போன்ற பருபொருள் கட்டுமானங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல். |
| 4. பள்ளி நிருவாகம் | (அ) | ஊராட்சி தலைவரைத் தலைவராகவும் தொகுதி உறுப்பினர்கள் தொடக்கப் பள்ளி ஆதாரப்பள்ளித் தலைமை ஆசிரியர் / தலைமை ஆசிரியை ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட ஊராட்சிக் கல்வி குழு ஒன்றை உருவாக்கி ஊராட்சி அளவில் கல்வியை வளர்த்தல். |

## II ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை<br>(1) | | அதிகார ஒப்படைப்பு<br>(2) |
|---|---|---|
| 1. பள்ளிகளை நிருவகித்தல் | (அ) | பள்ளிகளின் அமைவிடதைக் கண்டறியும் பணியையும், அரசின் கோட்பாடுகளுக்கேற்ப (குடியிருப்புப் பகுதியிலமைந்த மக்கள் தொகை மற்றும் குடியிருப்புப் பகுதிக்கும் பள்ளிக்கும் இடையேயான தொலைவு) புதிய பள்ளிகளைத் திறப்பதற்கு / பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு முடிவெடுக்கு முன் பணியையும் மேற்கொள்ளுதல். |
| | (ஆ) | தொடக்கப் ஆதாரப் பள்ளிகளின் செயற்பாடுகளை ஆய்வு செய்தல். |
| | (இ) | பல்வேறு திட்டங்களின் கீழ் வழங்கும் கற்பதற்கான பொருள்கள், புத்தகங்கள், சீருடை, காலணி போன்றவை வழங்குவதை ஒருங் கிணைந்தல். |
| | (ஈ) | முழு அளவில் சிறுவர்களை குறிப்பாக சிறுமிகளை சேர்ப்பதற்கும் படிப்பைப் பாதியில் நிறுத்துவோர்களின் எண்ணிக் கையைக் குறைக்கவும், இயக்கம் நடத்துதல். |

| (1) | (2) |
|---|---|
| | (உ) ஆசிரியர்களின் வருகையையும், பள்ளி களின் திறமையான செயல்பாடு களையும் உறுதி செய்யும் வகையில் ஊராட்சி அனுப்பும் முறையீடு அறிக்கையை ஆய்தல். |
| | (ஊ) பள்ளி உள்ளமைப்புகளின் கட்டுமானத் திற்காகச் ஊராட்சிகளுக்குத் தொழில் நுட்ப மற்றும் நிதியுதவி ஆதரவுக்கு வழிவகை செய்தல். |
| | (எ) இதில் குறிப்பிடப்பட்டுள்ள நடவடிக்கை களைக் கவனிப்பதற்காக, சட்டத்தில் குறிப்பிடப் பெற்ற நிலையான கல்விக் குழு ஒன்றை அமைத்தல். |

## III மாவட்ட ஊராட்சி

| நடவடிக்கை (1) | அதிகார ஒப்படைப்பு (2) |
|---|---|
| 1. ஆரம்பக்கல்வியை விரிவுபடுத்தி அதன் தரத்தை மேம்படுத்தல். | (அ) (i) தரத்திலும், அளவிலும் மாநிலம்/சிறந்த மாவட்டங்களுடன் ஒப்பு நோக்கு தகுநிலைக்கு மாவட்டத் திற்கான கல்வி மேம்பாட்டுத் திட்ட மிடுதலைக் கருத்தில் கொள்ளுதல். காலமுறைப் படி முன்னேற்றத்தை மறுஆய்வு செய்ய கல்வி மாநாட்டிற்கு ஏற்பாடு செய்தல். |
| | (ii) பள்ளி செல்லும் வயதுடையோரின் பெருக்கம் மற்றும் பெருகி வரும் குடியிருப்புகளின் எண்ணிக்கை ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தேவைப்படும் பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் பற்றி மதிப்பீடு செய்த பின்னர் தொடக்க நிலைப்பள்ளி களுக்கான மாவட்ட அளவிலான திட்டத்தைத் தயாரித்தல். |
| | (ஆ) குறிப்பாக மக்கள் தொகையில், கல்வியறிவு இல்லாத பிரிவினர்/பகுதியினர் இடையே கல்வியைப் பரப்புவதற்கும் உயர் நிலைகளை அடைவதற்கும் அரசுக்கு நடைமுறைத் திறன்கள், கருத்துரைகள் பற்றி அறிவுறுத்துதல். |
| | (இ) கல்வி மேம்பாட்டிற்கான விரிவான வளஆதாரங்களுக்கு நடைமுறைத் திறன் மீது சமுதாய பங்களிப்பு வாயிலாக குறிப்பாக, முதலீட்டுப் பணிகளுக்கும், கற்பித்தல் தளவாடங் களுக்கும் மாவட்ட அளவில் வள ஆதாரங்களை உயர்த்துவதற்கு ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அறிவுரை வழங்குதல். |
| | (ஈ) கல்வித் தரம் தொடர்பில் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளின் செயலாக்கத்தைக் கண்காணித்து மதிப்பிடல். |

| (1) | | (2) |
|---|---|---|
| | (உ) | பள்ளிகளில் அனைவரையும் குறிப்பாக பெண்களை சேர்த்தல் மற்றும் படிப்பைப் இடையில் நிறுத்துபவர்களின் எண்ணிக் கையை குறைத்தல் ஆகியவை தொடர்பான இயக்கங்கள், கருத்தரங் கங்கள் நடத்துவதற்கு ஏற்பாடு செய்தல். |
| 2. பள்ளிகளை நிருவகித்தல் | (அ) | பள்ளிகளின் செயல்பாட்டை மேம் படுத்துவதற்கு மாநில ஆரம்பக் கல்வித் துறையை ஒருங்கிணைத்தல். |
| | (ஆ) | மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தைச் செயற்படுத்த உதவுதல். |
| 3. தடைகளை நீக்குதல் | (அ) | குழந்தைகளின் படிப்பை இடையில் நிறுத்திவிட வலியுறுத்தும் நெருக்கடி நிலையைத் தொடர்ந்து ஆராய்வதுடன், அத்தகைய நெருக்கடிகளின் செல் வாக்கைக் குறைக்கப் பொருளாதார, சமூக மேம்பாட்டுத் திட்டங்களை, திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல். |

நிருவாகச் சிக்கல்கள்

10. மாநிலத் திட்டக்குழு பரிந்துரைத்தவாறு தொடக்கக் கல்வி தொடர்புடைய அதிகாரங்களை பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்கு ஒப்படைப்பதானது பல நிருவாக மாற்றல்களை உள்ளாக்கும். **35.000க்கும்** மேற்பட்ட (கல்வி) நிறுவனங்களையும் (ஆரம்ப மற்றும் தொடக்கப் பள்ளிகள்) சற்றொப்ப **1.75** இலட்சம் ஆசிரியர்களின் நிருவாகக் கட்டுப்பாட்டையும் மாற்றம் செய்வது என்பது ஒரு பெருமுடிவாகும். கல்வி நிறுவனர்களும், ஆசிரியர்களும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களுக்குப் பதில் சொல்லும் பொறுப்புடையவர்களாகி விடுவர். இந்நாள் வரையிலும், தொடக்கக் கல்வித் துறையின் அலுவலர்களின் பழமரபின்படி அவர்கள் கண்காணிக்கப் பெற்றனர். தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் செயல்பாட்டை ஆய்வு செய்யவும் மேற்பார்வையிடவும் ஊராட்சி நிருவாக அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க மாநில திட்டக்குழு பரிந்துரை செய்கிறது.

11. ஊராட்சிகள் தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் நடைமுறைகளை மேற்பார்வை செய்து காணப்படும் குறைப்பாடுகளை ஊராட்சி ஒன்றியத்திற்கும், உதவி தொடக்க கல்வி அலுவலர்க்கும் தெரியபடுத்துதல் வேண்டும். ஊராட்சிகளிடமிருந்து பெறப்பட்ட மேற்பார்வை அறிக்கைகளையும் மற்றும் மேற்படி ஒன்றியத்தில் நடைமுறைப் படுத்தப்படும் கல்வித் திட்டங்களின் செயல்பாடுகளையும் ஊராட்சி ஒன்றிய அவை மறுஆய்வு செய்யும். உதவி தொடக்கக் கல்வி அலுவலர் மேற்படி அவை நடத்தும் ஆய்வு கூட்டத்தில் கலந்து கொண்டு ஊராட்சிகளிலிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அவைக்கு தெரிவிக்க வேண்டும். மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் செயல்படும் ஆரம்ப மற்றும் தொடக்கக் கல்வி திட்ட செயல்பாடுகள் மற்றும் அது குறித்த குறைகளை ஆய்வு செய்யும். மாவட்ட ஊராட்சி மாவட்ட அளவில் புதிய பள்ளிகளை துவங்கவும், இருக்கும் பள்ளிகளை மாற்றி அமைக்கவும் மற்றும் ஆரம்ப மற்றும் தொடக்கக் கல்வி வளர்ச்சி குறித்த பிற கருத்துருக்களை அரசுக்கு பரிந்துரை செய்யும்.

12. மாநிலத் திட்டக்குழுப் பரிந்துரைகளின் இப்பகுதியில், ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், பிற்பட்ட வகுப்பினர் மற்றும் மிகவும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோருக்காக இயங்கும் தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகள், தங்கும் விடுதிகளின் மேலாண்மைக் கூறுகள் சேர்க்கப்படவில்லை. இப்பொருள்கள் நலிவுற்ற பிரிவினரின், குறிப்பாக ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரின் நலம் குறித்த பகுதியில் (அட்டவணை IVஇன் இனம் 27) கலாந்தாயப்படும்.

## நிதிச் சிக்கல்கள்

13. குடிநீர் வசதிகளுடனும், கழிவறை ஆகியவற்றுடனும், பள்ளிக்கட்டங்கள் கட்டப்பெறுவதற்கும், அக்கட்டடங்களைப் பேணுவதற்கும் கணிசமான செலவாகும். புதிய கட்டடங்கள், கூடுதல் வகுப்பறைகள், விடுதிகள், கழிப்பறைகள் போன்றவற்றைக் கட்டும் பணி ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட மாவட்டத் திட்டம் ஆகிய வளர்ச்சித் திட்டங்களின் கீழ் எடுத்துக்கொள்ளலாம். பேணுவதற்கான மானியங்கள் அரசால் அளிக்கப்பட வேண்டும். பள்ளிக் கட்டடங்களை பேணுவதற்காக ஊராட்சி ஒன்றியங்களுக்குப் பேணுகை மானியங்களை கணிப்பதற்குரிய அளவுகோல்கள், தொகையளவு ஆகியவை மீதான பரிந்துரைகளை மாநில நிதி ஆணையம் வழங்கியிருக்குமென கருதப்படுகிறது.

## சட்டச் சிக்கல்கள்

14. கல்வியை பொருத்த வரையில், முதல்கட்டமாக ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி ஆகிய அமைப்புகளை ஊக்கமுடன் ஈடுபடுத்தி, தொடக்க மற்றும் ஆரம்ப பள்ளிகளின் நடைமுறைகளை ஆய்வு மற்றும் மேற்பார்வை செய்யவும், ஆரம்ப மற்றும் தொடக்க கல்வி வளர்ச்சித் திட்ட பணிகளை ஆய்வு செய்யவும் ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க நாம் முதற்கட்டமாக பரிந்துறை செய்துள்ளோம். இரண்டாம் கட்டமாக (இரண்டு ஆண்டுகளுக்கு பின்) ஊராட்சி அமைப்புகளுக்கு மேலும் அதிகாரங்கள் வழங்கலாம்.